**மாவதகம பிரதேச சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாவதகம பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து மாவதகம பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும்

போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | செலுத்தி பூர்த்திசெய்த 16 நிர்மாண வேலைகளில் ரூபா 4,607,251 செலவுகள் மீண்டும் கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இந்த 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளிலிருந்து காணப்படுகின்ற கடன்கொடுத்தோர் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து ஏடுகளிலிருந்து நீக்குதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கு வைத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெமர் 31 இல் உள்ளவாறு ரூபா 893,029 பெறுமதியான களஞ்சிய இருப்புக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பட்டோலைகளில் இருப்பு தயாரிக்கப்பட்டுள்ள முறைமைக்கு இணங்க ரூபா 893,029 வித்தியாசம் காணப்பட்டது. இது தொடர்பான விடயங்களை ஆராய்ந்து பார்த்து | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | | அடுத்துவரும் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் இது சரிசெய்யப்படும். | |
| (இ) | மீளாய்வாண்டில் கேள்வி வரி பெறுவனவுகள் ரூபா 135,843 மற்றும் ஊழியர் பிணை வைப்புக்கள் ரூபா 319,803 நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்யப்படும். | -மேற்படி- |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் மாதம் சபை ஊழியர்களுக்குச் செலுத்த வேண்டிய மேலதிக நேரவேலை ரூபா 7,962 ஆக இருந்த போதிலும் அது ரூபா 79,624 ஆக அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டின் திசெம்பர் மாதம் ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்ட மேலதிக நேர வேலைப்படி ரூபா 7,962 தொகை அச்சிடல் தவறினால் ரூபா 79,621 ஆக பதிவுசெய்யப்பட்டதினாலான பிழை சரிசெய்யப்படும். | கணக்குகள் சரிசெய்யப்படுதல் வேண்டும் |
| (உ) | திப்படுலந்த தோட்டக் காணியின் பெறுமதி ரூபா 150,000 ஆக இருந்த போதிலும் அது ரூபா 15,000 ஆக பதிவு செய்யப்பட்டிருந்தது. | திப்படுலந்த தோட்டக் காணியின் பெறுமதி ரூபா 15,000 ஆக பதிவுசெய்யப்பட்டிருந்தது அச்சிடல் தவறினாலானதுடன் அது 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சரிசெய்யப்படும். | சரியாக கணக்கு வைத்தல் வேண்டும். |
| (ஊ) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட ரூபா 50,000 பெறுமதியான 02 ரூட் 10 பேச்சர்ஸ் அளவான காணி கணக்கீடு செய்யப்பட்பட்டிருகவில்லை. | கணக்கீடு செய்யப்படாத ரூபா 50,000 பெறுமதியான காணியின் பெறுமதியை இந்த ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளில் சரிசெய்யப்படும். | -மேற்படி- |
| (எ) | ரூபா 1,553,182 பெறுமதியான 45 செலவு விடயங்கள் தொடர்பான கடன்கொடுத்தோர், தேசத்தை கட்டியெழுப்புதல் வரி ரூபா 61,746 செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 84,548 என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அச்சிடல் தவறினால் பதியப்படாத ரூபா 1,553,182 பெறுமதியான கடன்கொடுத்தோர் 2023 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளின் மூலம் சரிசெய்யப்படும். | -மேற்படி- |

### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மொத்தமாக ரூபா 534,510,700 தொகையான 12 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகளுக்கும் பட்டோலைகளில் காட்டப்பட்ட மீதிகளுக்குமிடையே ரூபா 33,722,746 வித்தியாசம் காணப்பட்டது. | முத்திரைக் கட்டணங்களின் நிதிக்கூற்றுக்களுக்கும் பட்டோலைகளுக்குமிடையிலான வித்தியாசம் அச்சிடல் தவறினாலாகும். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற மீதிகள் பட்டோலைகளின் மீதிக்கு சமமாக இருத்தல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் ரூபா 49,201,526 பெறுமதியான 05 கணக்கு மீதிகளை அந்த மீதிகள் உருவாகிய முறைமைகளை உறுதிப்படுத்துவதற்கும் தேவையான பட்டோலைகள், ஆவணங்கள், மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் என்பன சமர்ப்பிக்காமையால் கணக்காய்வின் போது திருப்த்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | இந்த மீதிகள் நீண்ட காலமாக நிதிக்கூற்றுக்களில் பதியப்பட்டுக் காணப்பட்டதுடன் மீதிகள் உருவாகிய முறைமை தொடர்பான ஆவணங்கள் எங்களிடம் இல்லை. | போதியளவு சான்றுகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்னைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலிவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நி.பி 177 | உடல் சுகாதார நிலையத்தினால் சேகரிக்கப்படுகின்ற பணம் அந்த உத்தியோகத்தரினால் நீண்ட காலத்திற்கு கையில் வைத்திருக்கப்பட்டிருந்தது. | அந்த உத்தியோகத்தர் பணத்தை அவரின் கையில் நீண்ட காலமாக வைத்திருந்ததனால் அலுவலகத்திற்கு பணத்தை | வருமானங்களை சேகரிப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் மாத்திரம் அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | செலுத்துமாறு எழுத்துமூலம் தெரியப்படுத்தப்பட்டது. அடுத்து வரும் காலங்களில் சரியான நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டியதுடன் சேகரிக்கப்படுகின்ற வருமானத்தை துரிதமாக வங்கியில் வைப்புச் செய்தல் வேண்டும். |
| (ஆ) | 2019 சனவரி 10 ஆந் திகதிய 2019/02 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் (ii) ஆம் பிரிவு | கேள்வி மூலம் ரூபா 1,500,000 தொகையான ஒரே தீர்வையில் அறவிடப்படுகின்ற பணத்தை அறவிட்டு வழங்கப்பட்ட 06 கடைகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட வாடகையை அறவீடு செய்வதற்குப் பதிலாக மாதாந்தம் ரூபா 500 தொகையான பெயரளவிலான வாடகை அறவிடப்பட்டிருந்தது. | மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் அந்த பெயரளவிலான கடைவாடகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டிற்குத் தேவையான ஆவணங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. | மதிப்பீட்டினை துரிதமாக மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 10,000,841 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 31,592,419 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | 2022 மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | 2021 மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீத வரியும் வரியும் | 5,110 | 5,130 | 3,947 | 6,541 | 5,560 | 4,782 | 4,049 | 7,044 |
| வாடகை | 8,670 | 9,323 | 9,403 | 553 | 13,916 | 6,832 | 8,007 | 8,554 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 600 | 217 | 217 | - | 401 | 217 | 217 | - |
| ஏனைய வருமானம் | 110,231 | 167,636 | 167,636 | 19,208 | 380,500 | 49,798 | 42,853 | 68,144 |
| | ---------- | --------- | ------ | ----- | ----- | ------- | ------- | ----- |
| மொத்தம் | 124,611 | 182,306 | 181,203 | 26,302 | 400,377 | 61,629 | 55,126 | 83,742 |
| | ===== | ===== | ==== | ==== | ==== | ===== | ==== | ==== |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 4,708 ஆதனஙகளிலிருந்து ரூபா 6,541,691 தொகையான நிலுவையான வீதவரி மீதி காணப்பட்டது. | 1988 பிரதேச சபை (நிதியும் நிருவாகமும்) சட்டவிதி 32 - 42 இன் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்கு விதிகளுக்கு இணங்க நிலுவை வருமானம் அறவிடப்படுதல் வேண்டும். |
| **(ஆ) ஏக்கர் வரி** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 656,138 ஆனது நிலுவையான ஏக்கர் வரிப் பணமாகும் | நிலுவைகளை அறவீடு செய்வதற்காக தற்பொழுது கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(இ) வாடகை** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடை வாடகை மற்றும் சொத்துக்களை குத்தகைக்கு வழங்குதலின் நிலுவையான ரூபா 668,674 பணத்தை | மிகுதியான 04 கடைகளுக்குரிய நிலுவைப் பணத்தை செலுத:துமாறும் அவ்வாறு செலுத்தவில்லையாயின் அக்கேள்வி இரத்துச் | அறவிடப்படாதுள்ள மிகுதியான நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் பஸ் தரிப்பிடத்தின் முதலாவது மாடியிலுள்ள 05 கடைகளை குத்தகைக்கு வழங்கும் போது பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒரே தடவையில் செலுத்தும் பணமாகிய ரூபா 6,674,500 தொகை அறவிட வேண்டிக் காணப்பட்டது. | செய்யப்படும் எனவும் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 கழிவுப் பொருள் முகாமைத:துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | இறந்த கழிவுப் பொருட்களை சுத்திகரிக்கும் நிலையம் செயற்படும் நிலையில் இல்லாததுடன் ரூபா 600,000 அளவில் செலவு செய்து இறந்த கழிவுப் பொருட்களைப் போடுவதற்கு தயாரிக்கப்பட்டுள்ள Ramp ஆனது உழவு இயந்திரம் உட்செல்லக்கூடிய நிலையில் இல்லாதிருந்தது. | இக்காணியில் உள்ள இடவசதிகளைக் கருத்தில் கொண்டு குறைந்த செலவினை மேற்கொண்டு இந்த Ramp நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் காணப்படுகின்ற கட்டிடத்தினால் கழிவுப் பொருட்களை இறக்குவதற்கும் செல்லும் பாதைக்கு தடை இல்லாத வகையில் இந்த Ramp நிர்மாணிக்கப்பட்டுள்ளது. மேலும் அதனைச் சுற்றி கிரவல் நிரப்பி உழவு இயந்திரம் உட்செல்லக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. | நிர்மாண வேலைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் சாத்தியவள ஆய்வினை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ii) | கழிவுப் பொருட்களை மீள் சுழற்சி செய்வதற்காக பயன்படுத்துகின்ற 04 ஏக்கர் 90 பேச்சஸ் பரப்பளவுள்ள டெனவர் வத்த காணியை 2023 மார்ச் 13 ஆந் திகதி வரையும் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | டெனவர்வத்த காணியை 2023 ஆம் ஆண்டளவில் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | காணியை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திளனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டு வரும் ரூபா 93,989 தொகையான 09 முற்பண மீதிகளை தீர்த்:து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2017 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் மீதியாகும். அது சம்பந்தமான தகவல்கள் தேடிப்பார்க்கப்பட்டு வருகின்றது. அடுத்துவரும் காலங்களில் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முற்பண மீதிகளை தீர்த:துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) வீதவரி ஆதனங்களின் மதிப்பீடு 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டிற்கு இணங்க வீதவரி அறவிடப்பட்டிருந்தது. இதன் காணரமாக 2012 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரை இணக்கப்பாட்டு சான்றிதழினைப் பெற்றுக்கொண்ட 227 ஆதனங்களக்கு அண்மித்த அளவானவற்றிற்கான வீதவரி வருமானத்தினை சபை இழந்திருந்தது. | 2023 ஆம் ஆண்டில் ஆதனங்களின் மதிப்பீடு மேற்கொள்ளப்படும் என எங்களுக்கு எழுத்துமூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் அதற்குத் தேவையான ஆதனப் பட்டியல் எங்களால் மதிப்பீட:டுத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. | புதிதாக சேர்க்கப்பட்டுள்ள வீதவரி ஆதனங்களை மதிப்பீடு செய்து பதிவேடுகளுக்கு உள்ளடக்கி வீதவரியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) உள்ளூராட்சி திணைக்களத்தின் ஆலோசனையின் அடிப்படையில் வடமேல் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையுடன் தொடர்புகொண்டு பிரதேச சபைகளின் வருமானங்களையும் செலவுகளையும் அறிக்கையிடுவதற்காக CAT 2020 மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. இந்த மென்பொருளை ஸ்தாபிப்பதற்காக 2021 | உள்ளூராட்சி திணைக்களத்தினால் 2021 ஆம் ஆண்டில் ரூபா 400,000 உதவிப் பணம் மாவதகம பிரதேச சபைக்காக வடமேல் மாகாண அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்தப்பட்டது. மிகுதிப் பணத்தை செலுத்துவதற்கு நிர்ணயிக்கக்கப்பட்டுள்ளது. 2022 சனவரி மாதமளவில் CAT 2020 இனை ஆரம்பிப்பதற்கு போதியளவு கணனிகளும் | மென்பொருளில் காணப்பட்ட குறைபாடுகளை நீக்கி எதிர்பார்த்த செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆகஸ்ட் 26 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் இதற்காக பிரதேச சபையினால் ரூபா 970,000 பணம் செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் மென்பொருளின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளை ஒரு ஆண்டு காலத்திற்குள் ஆரம்பித்து செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என உடன்படிக்கையில் காட்டப்பட்டிருந்தும் அந்த மென்பொருள் 2022 சனவரி வரையும் முறைப்படியாக அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில் லை. | கணனி அறிவுள்ள உத்தியோகத்தர்களும் இல்லாதிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முடிவடைவதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. 2020 யூலை மாதம் CAT 2020 மென்பொருளினைப் பயன்படுத்தி பட்டியல் வழங்குதல் ஆரம்பித்து தற்பொழுது 08 பிரிவுகளினூடாக அமுல்ப்படுத்தப்பட்டு வருகின்றது. | |
| (ஆ) | சபையின் கெப் வாகனத்திற்கு 2022 மே 09 ஆந் தகிதி ஏற்பட்ட சேதம் தொடர்பாக 2022 மே 30 ஆந் திகதிய KRG/E/MPS/22/52 ஆம் இலக்க கணக்காய்வு ஐய வினாவின் மூலம் விசாரிக்கப்பட்டிருந்ததுடன் 2022 நவம்பர் 05 கணக்காய்வுத் திகதி வரையும் இந்த வாகனத்தை திருத்தம் செய்து சபைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | கெப் வாகனத்திற்கு ஏற்பட்ட சேதம் சம்பந்தமாக நீர்கொழும்பு நீதவான நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதனால் ஒரு மாத்திற்கு மேற்பட்ட காலம் நீதவான் நீதிமன்றத்தில் வாகனம் நிறுத்திவைக்கப்பட்டிருந்தத னால் திருத்தம் செய்யும் நடவடிக்கை தாமதமடைந்துள்ளது. | வாகனத்திற்கு ஏற்பட்ட சேததத்தின் மூலம் நட்டத்தை அதற்கு பொறுப்பக் கூற வேண்டிய நபர்களிடமிருந்து அறவீடு செய்வாதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மாவத்தகம பஸ்தரிப்பிடத்தின் முதலாவது மாடியிலுள்ள 05 கடைகளை 2022 மார்ச் 02 ஆந் திகதி சபைத் தீர்மானத்தின் பேரில் 24 தவணைகளில் செலுததுதம் அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. ஒரே தடவையில் செலுத்தும் பணத்தை 02 ஆண்டுகளுக்கு அண்மித்த காலத்தில் பகுதி பகுதியாக அறவீடு செய்ததனால் அக்காலத்திறகான மாதாந்த வாடகைப் பணத்தை சபை இழந்திருந்தது. | 24 தவணைகளில் செலுத்துவதற்கான சலுகைக்காலம் வழங்கப்பட்டிருந்தும் உரிய தவணைப் பணத்தை செலுத்தாத நபர்களின் கேள்வியை இரத்துச் செய்ய வேண்டி ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டிலிருந்து கடை வாடகையை அறவீடு செய்தல் இடம்பெற்றுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையிடம் பொது நூல் நிலையத்திற்கு அருகிலுள்ள 40 பேச்சஸ் அளவான வணிகப் பெறுமதியைக் கொண்ட காணி காணப்பட்டிருந்தும் அதனை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளாது பாதுகாப்பின்றி உள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | 2022 ஆம் ஆண்டிலிருந்து குத்தகை அடிப்படையில் கேள்வி கோரி வியாபார நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ளது. | சபையின் ஆதனங்களிலிருந்து உச்ச அளவு பயன்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்தக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) சபையின் ரூபா 10,100,000 பெறுமதியான 02 வாகனங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டன. | கைதவிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | கைதவிர்ப்பு நடவடிக்கைகளை துரிதமாகச் செய்து கைதவிர்ப்பின் போது பெற்றுக்கொள்ளக்கூடிய சாதகமான நிலைமையை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 05 ஆண்டுகளுக்கு முன்பிலிருந்து குபோடா மினி ட்ரக்டர் டேலர் உடைந்த நிலையில் காணப்பட்டதனால் பயன்படுத்துவதிலிருந்து நீக்கி வைக்கப்பட்டிருந்தும் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி திணைக்களத்தின் இயந்திர பொறியியலாளரின் முழுமையான கண்காணிப்பின் அடிப்படையில் அடுத்துவரும் பொருள் மீளாய்வு குழுவின் மூலம் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

## 3.6 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 2019-01-10 ஆந் திகதிய 2019/01 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆதனங்களை வருடாந்தம் குத்தகைக்கு வழங்கும் போது பெறுகை அறிவித்தல் | இந்த மூன்று உணவுச்சாலைகளுக்காக ரூபா 1,500 மாதாந்த குத்தகைப் பணத்திற்கு 10% சேர்க்கப்பட்டு வாடகை பெற்றுக்கொள்ளல் | பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்து கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | வெளியிடப்பட்டு குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 2022 ஆம் ஆண்டிற்காக வாராந்த சந்தையின் 1, 2 மற்றும் 3 ஆம் இலக்க உணவுச்சாலை கடைகளை குத்தகைக்கு வழங்கும் போது அவ்வாறு பெறுகை நடைமுறை பின்பற்றப்படாது 2019 ஆம் ஆண்டிலிருந்து அதே 3 நபர்களுக்கு ரூபா 1,500 வீதம் உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | இடம்பெற்றிருந்தது. | வேண்டும். |
| (ஆ) | சபையின் 36 ஆம் இலக்க தவறனை கட்டிடத்தினை வருடாந்தம் குத்தகைக்கு வழங்கும் போது பெறுகை நடைமுறையினைப் பின்பற்றி குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக வருடாந்தம் சபையினால் வழங்கப்படுகின்ற ஆவணங்களின் அடிப்படையில் நிண்ட காலமாக ஒரே நபருக்கு மாதாந்தம் ரூபா 26,000 பணத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிறுவனத்துடன் சபையினால் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையின் தவறணை கட்டிடத்தினை வியாபார நடவடிக்கைகளுக்காக நீண்டகாலமாக ஒரு நபருக்கு வழங்குதல் சபையினால் மேற்கொள்ளப்பட்டது. எனவே உரிய நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பெறுகை நடைமுறைகளுக்கு இணங்க கட்டிடத்தினை குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பிரதேச சபையினால் கழிவு நீரினை மீள்சுழற்சி செய்யும் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 5,149,260 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. உரிய நியமதரத்தில் நிர்மாணிக்கப்படாத இந்த முறைமைக்கு பிரதேசத்திலுள்ள கழிவு நிரை வெளியாக்கியதன் காரணமாக பிரதேசம் மிகவும் அசுத்தமாகவும் துர்நாற்றமாகவும் உள்ளது என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. முறைமையானது உரிய நியமத்தில் இல்லாதிருந்தும் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டின் ஒக்தோபர் வரை 571 கலிபவுஸர்கள் கழிவு நீரை வெளியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | இந்த முறைமையை நிர்மாணிப்பதற்காக தேசிய கழிவுப் பொருள் முகாமைத்துவம் உதவி நிலையத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள திட்டங்கள் மற்றும் பொருள் விபரக் குறிப்புக்கள் பயன்படுத்தப்பட்டன. எனினும் இந்த முறைமையானது உரிய முறையில் அமுல்ப்படுத்தப்படவில்லை . | சுற்றாடலை பாதுகாக்கும் வகையில் கழிவு நீரினை வெளியாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |